செ.வெ.எண்.104 நாள்.2.2.2010

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை 600 084.

## சென்னை மராத்தான் 2010 – சின்னம் மற்றும் இணையதளம் வெளியீடு

### செய்திக்குறிப்பு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலமாக 8 – வது சென்னை மராத்தான் 2010 ஒட்டப் போட்டி 21.02.2010 அன்று சென்னையில் நடத்தப்படவுள்ளது. இந்த ஒட்டப் போட்டி பன்னாட்டு அளவிலான மராத்தான் ஓட்டப் போட்டிக்கு இணையாக நடத்தப்படவுள்ளது.

இந்த சென்னை மராத்தான் 2010 ஓட்டப் போட்டி தொடர்பான சின்னம் மற்றும் இணையதளம் ஆகியவற்றினை சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் 02.02.2010 அன்று வெளியிடப்பட்டது.

சென்னை மராத்தான் 2010 ஓட்டப் போட்டிகள் கீழ்குறிப்பிட்ட பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.

1. முழு மராத்தான் ஆண்களுக்கு மட்டும் - 42.2 கி.மீ.
2. அரை மராத்தான் ஆண்களுக்கு மட்டும் - 21.1 கி.மீ.
3. அரை மராத்தான் பெண்களுக்கு மட்டும் - 21.1 கி.மீ.
4. மினி மராத்தான் அனைத்து தர ஆண்களுக்கும் – 10 கி.மீ.
5. மினி மராத்தான் அனைத்து தர பெண்களுக்கும் – 10 கி.மீ.
6. மினி மராத்தான் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் – 5 கி.மீ.
7. மினி மராத்தான் பள்ளி மாணவியர்களுக்கு மட்டும்– 5 கி.மீ.
8. நிறுவனங்களின் ஆண்களுக்கு மட்டும் – 5 கி.மீ.
9. நிறுவனங்களின் பெண்களுக்கு மட்டும் – 5 கி.மீ.

இந்த மராத்தான் ஓட்டப் போட்டியில் கலந்துக் கொள்பவர்கள் chennaimarathon.net என்ற இணைய தளம் வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம் என்றும் சென்னையில் உள்ள அனைத்து நவீன விளையாட்டு அரங்கங்களிலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தலைமையகத்திலும் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

இந்த சென்னை மராத்தான் 2010 ஓட்டப் போட்டியில் தோராயமாக 30,000 வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் கலந்து கொண்டு வெற்றி பெறும் அனைத்து பிரிவினருக்கும் ரூ.20.00 லட்சம் வழங்கப்படவுள்ளது.

இந்த விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றம் விளையாட்டுத் துறை அமைச்சர், அரசு முதன்மை செயலர், இளைஞர் மற்றும் விளையாட்டு துறை மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையர் அவர்களம் கலந்து கொண்டனர்.

இது தொடர்பான இதர விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

Y3

**சான்றிதழ்கள்**

முதல் 25 இடங்களைப் பெறும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு **தகுதிச் சான்றிழ்கள்** வழங்கப்படும்.

சென்னை மராத்தான் 2010 ஒட்டப் போட்டியினை முழுமையாக முடித்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு **முழுமையாக முடித்தமைக்கான சான்றிதழ்கள்** வழங்கப்படும்.

சென்னை மராத்தான் 2010 ஒட்டப் போட்டியில் மினி மராத்தான் ஒட்டப் பிரிவில் கலந்து கொண்ட அனைவருக்கும் **கலந்து கொண்டமைக்கான சான்றிதழ்கள்** வழங்கப்படும்.

**கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஆஜராகவேண்டிய இடம்.**

சென்னை மராத்தான் 2010 ஒட்டப் போட்டிகள் கீழ்குறிப்பிட்ட இடங்களில் துவங்கப்படவுள்ளது.

| | |
|---|---|
| முழு மராத்தான் ஆண்களுக்கு மட்டும் - 42.2 கி.மீ. | மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா சதுக்கம் முன்பு துவங்கப்படும். |
| அரை மராத்தான் ஆண்களுக்கு மட்டும் - 21.1 கி.மீ. | மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா சதுக்கம் முன்பு துவங்கப்படும். |
| அரை மராத்தான் பெண்களுக்கு மட்டும்- 21.1 கி.மீ. | சென்னை பல்கலைக்கழகம் (பாரத ஸ்டேட் வங்கி - எ.டி.எம். சென்டர் முன்பு) முன்பு துவங்கப்படும். |
| மினி மராத்தான் அனைத்து தர ஆண்களுக்கும்– 10 கி.மீ. | மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா நீச்சல் குளம் முன்பு துவங்கப்படும். |
| மினி மராத்தான் அனைத்து தர பெண்களுக்கும் – 10 கி.மீ. | சுவாமி சிவானந்தா சாலையில் துவங்கப்படும். |
| மினி மராத்தான் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் – 5 கி.மீ. | நேப்பியர் பாலத்தில் அமைந்துள்ள மாநகராட்சி பூங்கா முன்பு துவங்கப்படும். |
| மினி மராத்தான் பள்ளி மாணவியர்களுக்கு மட்டும் – 5 கி.மீ. | அண்ணா சதுக்கம் எதிரில் அமைந்துள்ள சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் துவங்கப்படும். |
| நிறுவனங்களின் ஆண்களுக்கு மட்டும் – 5 கி.மீ. | மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பாரத ஸ்டேட் வங்கி - எ.டி.எம். சென்டர் முன்பு துவங்கப்படும். |
| நிறுவனங்களின் பெண்களுக்கு மட்டும் – 5 கி.மீ. | மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பாரத ஸ்டேட் வங்கி - எ.டி.எம். சென்டர் முன்பு துவங்கப்படும். |

**சென்னை மராத்தான் 2010 ஒட்டப் போட்டிகள் நடத்தப்படும் வழிகள்.**

சென்னை மராத்தான் 2010 ஒட்டப் போட்டிகள் சென்னை மெரினா கடற்கரை அண்ணா சதுக்கம் முன்பு துவங்கப்பட்டு அண்ணா சதுக்கம் முன்பே முடிக்கப்பட வேண்டும். மேலும், இந்த ஒட்டப் போட்டிகள் கீழ்குறிப்பிட்ட வழிகளில் நடத்தப்படும்.

| | | |
|---|---|---|
| முழு மராத்தான் | 42.2 கி.மீ. | போட்டிகள் துவங்கும் இடத்திலிருந்து பெசன்ட் நகர் வேளாங்கண்ணி மாதா கோவில் வரை சென்று மீண்டும் போட்டிகள் துவங்கப்பட்ட இடம் வந்தடைய வேண்டும் (இரு முறை) |
| அரை மராத்தான் | 21.1 கி.மீ. | போட்டிகள் துவங்கும் இடத்திலிருந்து பெசன்ட் நகர் வேளாங்கண்ணி மாதா கோவில் வரை சென்று மீண்டும் போட்டிகள் துவங்கப்பட்ட இடம் வந்தடைய வேண்டும் (ஒரு முறை) |
| மினி மராத்தான் | 10 கி.மீ. | போட்டிகள் துவங்கும் இடத்திலிருந்து ஃபோர்சோர் எஸ்டேட் வரை சென்று மீண்டும் போட்டிகள் துவங்கப்பட்ட இடம் வந்தடைய வேண்டும். |
| மினி மராத்தான் - பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் நிறுவனங்களின் ஆண்கள் மற்றும் பெண்கள். | 5 கி.மீ. | போட்டிகள் துவங்கும் இடத்திலிருந்து காந்தி சிலை வரை சென்று மீண்டும் போட்டிகள் துவங்கப்பட்ட இடத் வந்தடைய வேண்டும். |

**இதர விவரங்கள்**

முழு மராத்தான் மற்றும் அரை மராத்தான் போட்டிகளில் கலந்துக் கொள்ளும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான மருத்துவ பரிசோதனை போட்டிகள் துவங்கும் முந்தைய நாள் நடத்தப்படும். இந்த மருத்துவப் பரிசோதனை சென்னை பெரியமேட்டில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் நடத்தப்படும். இந்த வசதியினை அனைத்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதனைத் தவிர சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா நீச்சல் குளத்தில் மருத்துவர்கள் மற்றும் முதலுதவிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், மராத்தான் ஓட்டப் போட்டிகள் நடைபெறும் தூரம் முழுவதும் முதலுதவி, குடிதண்ணீர் மற்றும் ஆம்புலன்ஸ் மூலமாக அனைத்து மருத்துவ வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மராத்தான் 2010 ஓட்டப் போட்டிகள் நடைபெறும் தூரம் முழுவதும் தேவையான குடிநீர், ஸ்பான்ச் வசதிகள் மற்றும் முதலுதவி தொடர்பான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

3/3.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9